பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
31 03 2025 **MONDAY** 7 15 **AM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஏழை மக்களின் சொந்த வீடு கனவை நனவாக்குவது ஈடுஇணையற்ற மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பீகார் மாநில வளர்ச்சிக்காக தேசிய ஜனநாயக கூட்டணி அயராது பணியாற்றி வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. வடகிழக்கு மாநிலங்களில் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை மேலும் 6 மாதங்களுக்கு நீட்டித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது..

4. கனடாவின் **Ontario** பகுதியில் வீசிய பனிப்புயல் காரணமாக மூன்று லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

5. உலக கோப்பை குத்துச்சண்டைப் போட்டி பிரேஸிலில் இன்று தொடங்குகிறது.

>>>>>>><<<<<<

ஏழை மக்களின் சொந்த வீடு கனவை நனவாக்குவது ஈடுஇணையற்ற மகிழ்ச்சியை அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சத்திஷ்கர் மாநிலம், பிலாஸ்பூரில் 33 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டிப் பேசிய அவர், இம்மாநிலத்தில் உள்ள 3 லட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம் கிராமப்புற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருப்பதுடன், கட்டுமானப் பொருட்கள் உள்ளூரிலேயே கொள்முதல் செய்யப்பட்டதால், சிறுவியாபாரிகளும் பயனடைந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

இம்மாநிலத்தில் ரயில் கட்டமைப்பு முழுமையாக மின்மயமாக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது சுமார் 40 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ரயில்வே திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சத்திஷ்கர் மாநிலம் உருவாகி 25 ஆண்டுகள் நிறைவு பெறுவதை ஒட்டி வெள்ளிவிழா கொண்டாடப்படும் நிலையில், இம்மாநிலத்தை உருவாக்கிய முன்னாள் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பேயின் நூற்றாண்டு விழாவும் கொண்டாடப்படவுள்ளதாக திரு. நரேந்திர மோடி கூறினார்.

முன்னதாக மகாராஷ்ட்ர மாநிலம், நாக்பூரில் சூரியசக்தி பாதுகாப்பு மற்றும் வான் சாதன பரிசோதனை மையத்தை அவர் தொடங்கி வைத்தார்.

இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் இந்த பரிசோதனை மையம், பாதுகாப்புத்துறையின் சுயசார்புக்கு ஊக்கமளிப்பதாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

பீகார் மாநிலத்தின் வளர்ச்சிக்காக தேசிய ஜனநாயக கூட்டணி அயராது பணியாற்றி வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

பாட்னாவில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, பீகார் மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

>>>>>>><<<<<<

நாகாலாந்து மாநிலத்தின் எட்டு மாவட்டங்களில் ஆயுதப்படை சிறப்பு அதிகார சட்டத்தை நீட்டித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள இந்த உத்தரவின்படி, திம்மாப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களில் நாளை முதல் 6 மாதங்களுக்கு இந்த சட்டம் நீட்டிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, அருணாச்சலப்பிரதேசத்தின் 3 மாவட்டங்களிலும், மணிப்பூரில் 5 மாவட்டங்களிலும் இந்த சட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அஸ்ஸாமின் திப்ருகர் மாவட்டத்தில் இன்றுடன் ஆயுதப்படை சிறப்பு அதிகார சட்ட அமலாக்கம் முடிவடையும் என அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

இம்மாவட்டத்தில் நிலைமை மேம்பட்டிருப்பதை அடுத்து, இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

புனித ரமலான் பண்டிகை இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, தில்லி ஜூம்மா மசூதி, பதேபூர் மசூதி மற்றும் ஷாஹி ஈத்கா மைதானத்தில் நடைபெற்ற சிறப்புத் தொழுகையில் ஏராளமான இஸ்லாமியர்கள் பங்கேற்று ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

இதேபோன்று ஜம்மு காஷ்மீரின் ஸ்ரீநகர் மற்றும் உத்தரபிரதேசத்தின் லக்னோ உள்ளிட்ட இடங்களில் நடைபெற்ற சிறப்புத் தொழுகைகளிலும் ஏராளமானோர் பங்கேற்றனர்.

தமிழகத்திலும் பல்வேறு மசூதிகளில் ரமலான் சிறப்புத் தொழுகை நடைபெற்றது.

இந்நாளையொட்டி, தலைவர்கள் பலர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், புனித ரமலான் மாதத்தில் இஸ்லாமியர்கள் கடைபிடித்து வந்த நோன்பின் நிறைவை குறிக்கும் இந்நாளில் சகோதரத்துவம், ஒற்றுமை மற்றும் கருணை தழைத்தோங்கட்டும் என தெரிவித்துள்ளார்.

இந்நாள் மக்கள் அனைவரிடமும் அமைதி, முன்னேற்றம் மற்றும் மகிழ்ச்சியை அளிக்கட்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் தமது வாழ்த்துச் செய்தியில், கலாச்சார பன்முகத்தன்மை மற்றும் மக்கள் ஒருங்கிணைப்பின் வலிமையை இந்நாள் நினைவுபடுத்துவதாக கூறியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், நபிகள் நாயகம் போதித்த நெறியில் வாழ்ந்து, நோன்பு கடமைகளை நிறைவேற்றிய மனநிறைவோடு ரமலான் திருநாளை கொண்டாடும் இஸ்லாமியர்கள் அனைவருக்கும் தமது நல்வாழ்த்துகளை உரித்தாக்குவதாக தெரிவித்துள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள செய்தியில், நபிகள் நாயகத்தின் போதனைகளை நினைவில் கொண்டு, தத்தமது கடமைகளை செவ்வனே மேற்கொண்டு சிறப்பாக வாழ வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>><<<<<<

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, மகாராஷ்ட்ராவில் இரண்டு நாள் பயணமாக இன்று மும்பை செல்கிறார்.

இன்று மாலை மும்பை செல்லும் அவர், நாளை ரிசர்வ் வங்கியின் 90வது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

>>>>>>><<<<<<

கனடாவின் **Ontario** பகுதியில் வீசிய பனிப்புயல் காரணமாக மின்சாரம் தடைபட்டதால் சுமார் 3 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மின்சார தடை காரணமாக, ஒன்டாரியா பகுதியில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், இப்பகுதியில் நாளை மின்இணைப்பு சரிசெய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் நாட்களில் ஒட்டாவா, கியூபக் மற்றும் ஒன்டாரியா பகுதிகளில் உறைபனி நிலவக்கூடும் என்றும் அந்நாட்டு வானிலை மையம் எச்சரித்துள்ளது.

>>>>>>><<<<<<

கடுமையான நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மியான்மரில் தொற்றுநோய் பரவுவதை தடுக்க 8 மில்லியன் அமெரிக்க டாலர் நிதி தேவைப்படுவதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்தள்ளது.

மக்களவை பாதுகாக்க அடுத்த 30 நாட்களுக்குள் துரித நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம் என்று கூறியுள்ள அந்நிறுவனம், நிலநடுக்கத்தால் இதுவரை ஆயிரத்து 700-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில், மத்திய அரசின் ஆப்பரேசன் பிரம்மா திட்டத்தின் கீழ், இந்திய கடற்படையின் இரண்டு கப்பல்கள் 30 டன் நிவாரணப் பொருட்களுடன் அந்தமானிலிருந்து யாங்கான் புறப்பட்டுச் சென்றுள்ளது.

இதனிடையே, பசிபிக் தீவு நாடான **Tonga**–வில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவில் 7 புள்ளி ஒன்றாக பதிவாகியுள்ளது. மேலும் அப்பகுதியில் சுனாமி எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.

**>>>>>>><<<<<<**

கிரீஸ் நாட்டில் இன்று தொடங்கும் **Iniochos-25** எனப்படும் சர்வதேச விமானப் பயிற்சியில் இந்திய விமானப் படை பங்கேற்கிறது.

கிரீஸ் விமானப்படை சார்பில் 12 நாட்கள் நடைபெறவுள்ள இந்த பயிற்சி, அந்நாட்டின் **Elis** –ல் உள்ள விமானப்படை தளத்தில் நடைபெறுகிறது.

இதில் இந்திய விமானப்படையின் பல்வேறு ரக போர் விமானங்களும் பங்கேற்கின்றன.

இந்த கூட்டுப் பயிற்சி, விமானப்படைகளுக்கு இடையிலான சர்வதேச ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவதுடன், செயல்திறனையும் மேம்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>>><<<<<<**

ஜம்மு காஷ்மீரின் கத்துவா மாவட்டத்தில், தீவிரவாதிகளுடனான துப்பாக்கிச் சண்டையில் உயிரிழந்த இரண்டு காவலர்களின் குடும்பத்தினருக்கு தலா 70 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை நேற்று நேரில் சந்தித்து ஆறுதல் கூறிய அவர், இரண்டு காவலர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு அரசு பணி வழங்கப்படும் என்றும் கூறினார்.

>>>>>>><<<<<<

உலக கோப்பை குத்துச்சண்டைப் போட்டி பிரேஸிலில் இன்று தொடங்குகிறது.

வரும் 5ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டியில், 19 நாடுகளைச் சேர்ந்த 130 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

நரேந்தர் தலைமையிலான 10 பேர் கொண்ட இந்திய அணி இப்போட்டியில் பங்கேற்கவுள்ளது.

>>>>>>><<<<<<

ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா நேற்று இரண்டு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 61 கிலோ எடைப்பிரிவில் **Udit**-ம், 92 கிலோ எடைப்பிரிவில் **Deepak Puniya** –வும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

125 கிலோ எடைப்பிரிவில் தினேஷ் வெண்கலப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 3 வெள்ளி, 6 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>>>><<<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் குவஹாத்தியில் நடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி 6 ரன் வித்தியாசத்தில் சென்னையை அணியை வென்றது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் மும்பை அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மும்பையில் இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>>>><<<<<<

சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டி, ஸ்பெயினில் இன்று தொடங்குகிறது.

இந்தியாவின் சார்பில் ஜீவன் நெடுஞ்செழியன், விஜய்சுந்தர் பிரஷாந்த், சாகேத் மைனேனி, ராம்குமார் ராமநாதன் ஆகியோர் இதில் பங்கேற்கின்றனர்.

>>>>>>>END<<<<<<